8th April 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜப்பான் கூட அன்னிய நாடுதான் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாக பம்பு செட்டுகளுக்குப் பற்றாக்குறை இல்லை. ஸ்டாடர் போன்ற சிறு சிறு சாமான்கள்தான் வெளியில் இருந்து வரவேண்டியிருக்கிறது.

SRI R. KRISHNASAMI NAIDU : சென்னை இராஜ்யத்திற்கு பம்பு செட்டுகள் தேவையாக இருந்தாலும் கூட மோட்டார் இறக்குமதி செய்வதற்கு நம் இராஜ்யத்திலுள்ள லைசென்சுதாரர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. பம்பாய் இராஜ்யக்காரர்களுக்குத்தான் அனுமதி வழங்கப்படுகிறது. அதன்காரணமாக இவர்கள் பம்பாயிலிருந்து தருவிக்க வேண்டியிருக்கிறது என்கிற புகாரை கவனித்து இனி நம் இராஜ்யத் தேவைக்கு நம் இராஜ்ய லைசென்சுதாரர்களுக்கே அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் தகவல் இல்லை. இப்போதுள்ள புகார் எல்லாம் போதிய அளவுக்கு அனுமதி அளிக்கப்படுவதில்லை என்பதுதான்.

Women warders

* 605 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether railway warrants are issued to the temporary women warders as and when they travel on official duty?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : நிரந்தரமற்ற பெண் வார்டர்களுக்கு ரயில்வே வாரண்டு கொடுக்கப்படாத காரணத்தினால்.....

MR. SPEAKER : வாரண்டு கொடுக்கப்படுகிறதா என்ற கேள்விக்கு மந்திரி அவர்கள் கொடுக்கப்படுகிறது என்று பதிலளிக்கிறார். கனம் அங்கத்தினர் "நீங்கள் கொடுக்கப்படாத காரணத்தினால்" என்று கேள்வி தொடங்குவதை நான் அனுமதிக்க முடியாது.

Padmanabhapuram Palace and Museum

* 606 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the amount paid to the Kerala Government, as the Madras Government's share towards the maintenance of Padmanabhapuram Palace and Museum in Kanyakumari district?

THE HON. SRI C. SUBRAMANIAM : A sum of Rs. 125 has been paid to the Government of Kerala for urgent minor repairs done to the Padmanabhapuram Palace and Museum in the current year.

SRI N. K. PALANISAMI : My question is about the share of the Madras Government towards maintenance charges?

THE HON. SRI C. SUBRAMANIAM : The cost of maintenance of the Palace and the Museum would be shared equally between the Government of Madras and the Government of Kerala.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether the Padmanabhapuram Palace and Museum belong to our Government or to the Kerala Government? Also in view of the